1970 டிசம்பர் 2]

திரு. ஆ. கு. சுப்பையா : ஐயா, இந்த குடுமியாமலே விவசாயப் பண்ணை ஆதாயத்தில் நடந்து வருவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இம்மாதிரிப் பண்ணைகளைத் தமிழகத்தில் வேறு எங்கேயாவது ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்ய முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இன்றைக்கு கிட்டத்தட்ட 64 பண்ணைகள் இருக்கின்றன. இதில் மிகப்பெரிய பண்ணை இந்தக் குடுமியாமலைப் பண்ணை. எனவே. ஏற்கெனவே பண்ணைகள் இருக்கின்றன.

Indian Tobacco Development Council

*87 Q. THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state—

(a) whether the Indian Tobacco Development Council had met in the first week of April 1970;

(b) whether the State Government was represented at the meeting; and

(c) if not, the steps taken to secure representation?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) ஆம். இந்திய புகையிலை அபிவிருத்திக் குழுவின் கூட்டம் சென்னையில் 1970-ஆம் ஆண்டு ஏப்ரல் 3, 4 தேதிகளில் நடை பெற்றது.

(இ) மேற்படி கூட்டத்தில், சென்னை அரசின் பிரதிநிதியாக கூட்டு விவசாய நெறியாளர் கலந்து கொண்டார். மேலும், புகையிலை அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப் பேற்றுள்ள கிருஷ்ணகிரி தனி மாவட்ட வேளாண்மை அதிகாரியும் (எப். சி.வி. புகையிலை) மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டார்.

(உ) ஏற்கனவே, இந்திய புகையிலை அபிவிருத்திக் குழுவில் கூட்டு விவசாய நெறியாளர் (வணிகப்பயிர்) தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக இருக்கிறார்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, இந்தப் புகையிலை அபிவிருத்திக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் என்னென்ன? அந்த அபிவிருத்திக் குழுவில் செய்யப்பட்ட பரிந்துரைகளில் அரசு ஏற்றுக் கொண்டவை என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த அபிவிருத்திக் குழுவில், அதிகப்படியாக தீவிரமான முறையில் புகையிலை சாகுபடி செய்யவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சிகரெட்டிற்கான எப்.சி.வி. புகையிலை இப்பொழுது ஹோசூரில் பயிர் செய்யப்படுகிறது. இன்னும் அதிகப்படியான நிலப்பரப்பிலே செய்யவேண்டுமென்று இந்தக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. பரண்

ஒன்றுக்கு 4,000 ரூபாய் வரை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கட்டப்பட்ட ஒவ்வொரு பரணுக்கும் 20 சதவிகிதம் அல்லது உயர்ந்த பட்சம் ரூ. 1,000 மானியம் வழங்கப்படுகிறது. மேலும் கிணறுகள் வெட்டவும் 3,750 ரூபாய் கடன் வழங்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் புகையிலை அதிகமாகப் பயிர் செய்யப் படுகிறது. புகையிலை அபிவிருத்திக்காக அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஹோசூர் கிருஷ்ணகிரியில்தான் அதிகப்படியாக புகையிலை சாகுபடி செய்திருக் கிறது. தீவிர சாகுபடி செய்ய, "பாக்கேஜ் ஸ்கீம்" வைத்து தனி அதிகாரியை நியமித்து, குறிப்பாக எப்.சி.வி. புகையிலையை அதிகமாகச் செய்ய அக்கறை எடுத்து வருகிறோம்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, ஹோசூர், கிருஷ்ணகிரியைப்போன்று, தம்பம்பட்டியில் புகையிலை அதிகமாகச் சாகுபடி செய்யலாம். இந்த புகையிலை பயிரிடுவதை, தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ், பல்வேறு மாவட்டங்களில் நடத்தி, ஆங்காங்கே விவசாயிகள் இதைப் பயிர் செய்வதற்கு அரசாங்கம் ஊக்குவிக்குமா? அதற்கென்று சிறப்புத் திட்டத்தை அரசாங்கம் தீட்டுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ; அதற்குத் தனியாகக் கேள்வி போடவும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a number of areas like Hosur and Dankanikottah taluks in the Dharmapuri district where excellent Virginia tobacco grows and the acreage can be increased, if more facilities are granted to cultivators. Our Hon. Minister for Industries sometime back stated that there was a proposal before Government to start a cigarette factory in our State. May I know from the Hon. Minister for Agriculture whether she has taken up this matter with the Central Tobacco Council to give more funds or whether she is going to take it up hereafter ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சிகரெட் தொழிற்சாலைபற்றி தொழிலமைச்சரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். ஆனால் அதிகப்படியாக புகையிலை உற்பத்திக்கு அதிக அக்கறை எடுத்துக்கொள்ள இந்த அரசாங்கம் கருதி, விசேஷ அதிகாரியை நியமித்து, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறியதைப் போன்று பிற மாவட்டங்களில் எங்கெங்கு சாத்தியக்கூறு இருக்கிறதோ அதையெல்லாம் பரிசீலனை செய்து அதற்கான நடவடிக்கை எடுத்து இன்றைக்கும் முனைந்திருக்கிறது.

1970 டிசம்பர் 2]

THIRU B. VENKATASWAMY: From the answer given by the Hon. Minister it is stated that there is a package scheme in Hosur taluk. But actually only 500 or 600 acres have been cultivated there. There is great potentiality to increase the acreage under tobacco, a crop which gets us dollars.

So will this Government think of extending the acreage to 2000 or 3000 acres?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஹோசூரில் மத்திய அரசாங்கத்தின் உதவியோடு செயல்பட்டு வருகிறது. அங்கே கிட்டத்தட்ட 501 ஏக்கர் அளவில் புகையிலைப் பயிரிடப் படுகிறது. எனவே, மாநில அரசாங்கம் மத்திய சர்க்காருக்கு பரிந்துரை செய்து ஒப்புக்கொண்ட பிறகு மேலும் பல ஏக்கர்களுக்கு நீட்டிக்க அக்கறை எடுத்துக்கொள்ள முடியும் என்று மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. ஜார்ஜ்: தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் சப்-தாலூக்காவில் அதிகப்படியாக புகையிலை பயிரிடப் படுகிறது. எனவே, அங்கே பாக்கேஜ் ஸ்கீமை விஸ்தரிக்க இந்த அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: தற் பொழுது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், கோவை மாவட்டம், வடார்க்காடு மாவட்டம் போன்ற மாவட்டங்களில் பல இடங் களிலே ஏராளமாக புகையிலை விவசாயம் செய்யப்பட்டு வந்தது. இப்பொழுது மிகவும் குறைந்துள்ளதற்குக் காரணம், மத்திய சர்க்கார் அந்த விவசாயிகளுக்கு, வரி போட்டு பலவிதத்திலேயும் தொல்லை கொடுப்பதனால்தான் விவசாயிகள் ஊக்கத்தோடு விவசாயம் செய்வதற்கு அஞ்சுகிறார்கள் என்பது கனம் அமைச்சரவர் களுக்குத் தெரியுமா? இது விஷயத்தில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள அதிகப்படியான முயற்சி செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மாண்புமிகு உறுப்பினரவர்கள் அந்தக் குறைகளை எடுத்துச் சொல்கிறார்கள். ஆனால் புகையிலை சாகுபடி செய்யும் விவசாயிகள் அப்படிப்பட்ட குறைகளைச் சொன்னதாகத் தெரியவில்லை. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் ஏதாவது குறிப்பிட்ட குறைகளை எடுத்துச் சொன்னால் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

கோவை மாவட்டத்தில் பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரம்

* 88 வினா.—திரு. ஈ. எம். நடராசன்: மாண்புமிகு உணவு, உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள பர்கூர் கிராமத்தையும், கோபி வட்டத்தில் உள்ள கடம்பூர், குதியாலத்தூர், குன்றி ஆகிய கிராமங்களையும் இணைத்து ஒரு Tribal Block அமைக்க ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.